Judicial Form No.53
( See Rule 42 )

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**

**Case No. CC. No. 136/2024**

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருநாவுக்கரசு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சம்பங்கி | தொழில் | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| கிராமம் | ஆம்பூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 08th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>**முதல் விசாரணை :**</u> **எதிரி ஆஜர்**

நான் தற்போது ஆலங்காயம் ஊராட்சி ஒன்றிய கிராம வட்டாரவளர்ச்சி அலுவலராக பணி செய்கிறேன். நான் இதே அலுவலகத்தில் பணியில் இருந்த சமயம், கடந்த 05.10.2023 அன்று பொதுமக்களிடமிருந்து ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் மரங்கள் வெட்டப்படுவதாக தகவல் வந்தது. அந்த புகார் வந்தவுடன் பள்ளிக்கு நான் சென்றேன். அப்போது அங்கே பொதுமக்கள் மற்றும் ஊடக துறையினர் அங்கிருந்தார்கள். அந்த பள்ளியின் தலைமை ஆசிரியரும் அங்கு இருந்தார். 2 நிமிடங்கள் கழித்து அவரை நான் விசாரிக்கலாம் என்று பார்த்தபோது அவர் அங்கு இல்லை. அதற்குள் அங்குள்ள மரங்களை பார்த்தபோது அவை வெட்டப்பட்ட நிலையில் தரையோடு இருந்தது. பிறகு நான் அவற்றை புகைப்படம் எடுத்துக்கொண்டு அங்கிருந்து வந்துவிட்டேன். என்னுடைய உயர்

அலுவலர்களுக்கு இது குறித்து தகவல் அளித்தேன். நான் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை. என்னுடைய உயர் அலுவலர்கள் உத்தரவிற்காக காத்திருந்து 14.10.2023 அன்று காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நான் பார்த்தவரை சுமார் 18 மரங்கள் அங்கே வெட்டப்பட்டிருக்கலாம். மேலும், பட்டுபோன மரங்களும் அங்கு இருந்தது. அந்த மரங்கள் என்ன வகை மரங்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. ஆனால், அங்கிருந்தவர்கள் தேக்கு மரங்கள் வெட்டப்பட்டதாக கூறினார்கள். நான் அந்த பள்ளிக்கு சென்றபோது பணியில் இருந்த தலைமை ஆசிரியர் ஆஜர் எதிரி ஆவார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அளித்த புகார் ஆகும். **அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர், கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுதலுக்கிணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்